உ
சிவமயம்



யாழ்ப்பாணம் — வேலணை

வாசரும்

வேளாண் மரபு வழித் தோன்றலும்

சிறந்த சமயத் தொண்டருமான

## திருமதி. மூத்ததம்பி பார்வதிப்பிள்ளை

அவர்களின் மறைவு குறித்த

# நினைவுமலர்

## 1977

ஆக்கம்:

அ. கோ. பொன்னுச்சாமி
(ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்ப்பாணம்—வேலணை

வாசரும்

வேளாண் மரபு வழித் தோன்றலும்
சிறந்த சமயத் தொண்டருமான

## திருமதி. மூத்ததம்பி பார்வதிப்பிள்ளை

அவர்களின்

மறைவு குறித்த

# நினைவு மலர்

**தோற்றம்: 1897-07-22** **மறைவு: 1977-08-21**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

திருமதி - மூத்ததம்பி பார்வதிப்பிள்ளை இளம் வயதிலிருந்தே மிகுந்த தெய்வபக்தி உள்ளவர். அவரைப் போலவே அவருக்கு வாய்த்த கணவரும் குறையாத தெய்வபக்தி கொண்டவர். இருவரும் சேர்ந்து ஞானவைரவர் ஆலயத்திற்குச் செய்த தொண்டினை அனைவரும் அறிவர்.

திருமதி. பார்வதிப்பிள்ளை அனைவரோடும் அன்பாகப்பழகும் இயல்பினர். அதனுல் நல்லவர் என்ற பெயரைப் பெற்றவர். அவருடைய வாரிசுகள் குடும்பப் பரம்பரையைக் காத்து, பேரும் புகழும் ஈட்ட எல்லாம் வல்ல ஆண்டவன் இன்னருள் சுரப்பாளுக! பார்வதிப்பிள்ளையின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்ருேம்.

திரு. திருமதி. செல்லையா
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# திருமதி. மூத்ததம்பி பார்வதிப்பிள்ளை

## அவர்கள்

தோற்றம்: 1897-07-22 மறைவு: 1977-08-21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் பாக்கள்

## அரனடி அடைந்த நாள்

### வெண்பா

ஆண்டது பிங்களத்தி லமைந்தமதி ஆவணியாம்
பூண்டதோர் சப்தமி பொங்கனுசம் — ஈண்டுபுகழ்
பார்வதிப் பிள்ளையெனும் பாவையாள் புவிநீத்து
ஆர்வமுட னரனடைந்த நாள்.

## வரலாறு

### ஆசிரியப்பா

உலகுபுகழ்க் கவிஞன் உயர்கம்ப னென்பான்
அலகில்சீர்க் கவிகளால் அணிசெயும் பெருமையும்
மூவுல களித்த காவலனுகிய
இராவணப் பெரியோன் இனிதெனத் தேர்ந்து
தலைநக ராக்கித் தங்கிவீற் றிருந்த
நிலைமையி னுற்பெறு நிகரில் தலைமையும்
வாய்ந்துமா கடலுள் மலர்ந்திடு முத்தெனத்
தோய்ந்துபே ரழகு சுடர்தரத் துலங்கும்
ஈழநா டதனில் இனிசெந் தமிழோர்
வாழியாழ்ப் பாண வளம்பதி தன்னில்
கல்வியுஞ் செல்வமுங் களிநடம் புரிந்திடும்
தொல்பெரும் பதியாய்த் தோன்றிப் புகழ்பெறு
வேலணை யென்றிடு வியத்தகு பதியில்
உலகோர்க் குதவும் ஓங்குயர் உழுதொழில்
கைவரப் பெற்ற கவினுறு சைவ
வேளாண் மரபு விளங்கிடத் தோன்றிய
சிற்றம் பலமெனும் சீரியோன் தானும்
வள்ளி யம்மை வனிதையை மணந்து
இல்லறந் தன்னை இனிதுற நடாத்தி
வாழு நாளில் வந்துதித் தவள்தான்
பார்வதிப் பிள்ளையாம் பாங்குடை மாதே
வளர்பிறை யென்ன வகையுற வளர்ந்து
கற்பன கற்றுக் கல்வியிற் சிறந்து
கன்னிப் பருவம் கவினுறப் பெற்று
திருமண நினைவினைச் சிந்தையிற் கொண்டு
நாகப்பர் என்றிடு நல்லோன் தானும்
சின்னப் பிள்ளைச் சேயிழை தன்னைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பிடித் தீன்ற காளையோ ருகும்
மூத் தம்பி முதல் னவனை
நல்ல மஞ்ஞளனுய் நானிலத் தேற்றனள்
பூவும் மணமும் போல வாழ்ந்து
புண்ணியம் பற்பல புரிந்திடு காலை
ஞான வைரவர் நற்பெரு மருளால்
புதல்வியா யுதித்தவள் புவனேஸ் வரியே
எல்லா இன்பமும் இவளே யென்று
கண்ணின் மணியாய்க் காத்து வளர்த்து
வேண்டிய யாவும் விருப்பிட னளித்து
மங்கைப் பருவம் மருவிய போதில்
காரை நகரிற் களிப்புடன் வாழ்ந்த
கந்தையா வெனும் கண்ணிய மிக்கோன்
அன்னப் பிள்ளையாம் தேவியை மணந்து
பெற்றே யெடுத்த பெருந்தவப் புதல்வன்
ஒப்பந்த காரனுய் ஒண்பொருள் உற்ருேன்
வேளாண் தொழிலில் மிகுபொருள் பெற்ருேன்
ஊரார் போற்றும் உத்தம னுகிய
ஆறு முகமெனும் அன்புமிக் கோனை
தன்னொரு மகளின் கணவ னுக்கி
மருக னெனவே மகிழ்வுறக் கொண்டனள்
இராச ரத்தின இன்முகத் தோனும்
பராசக்தி யென்றிடு பாவைநல் லாளும்
அரிதிற் பெற்ற அருந்தவக் கொழுந்தாய்
அஞ்ச லதிபராய் அரும்பணி புரிந்திடும்
தையல் நாயகித் தவமிக வுடையாள்
தெய்வ நாயகன் என்னப் பெற்ற
மின்முகாரி யாக மிகுதொழில் புரியும்
வரத ராசனும் மகிபன் தனையும்
வேலா யுதராம் வித்தன் தானும்
அன்னம் மாவெனும் அணங்கினை மணந்து
நானிலத் தீன்ற நற்பெரு மகனுய்
கேஜி பல்தொழிற் கூடந் தன்னில்
இன்பாய்ப் பணிபுரி இன்முகத் தோனும்
நாகேந் திரனெனும் நம்பியை மணந்த
பத்ம ராணிப் பாங்குடை யாளையும்
பத்திமிக் குடைய பத்மா வதியையும்
ஆசிரியை யாகி அறிவினை யூட்டும்
யோக மிக்கவள் யோகேஸ் வரியையும்
யுகலோக ராசா உத்தமன் தனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியந் தவருச் சத்திய பாமாவையும்
பேர ரென்றே பெரிதுவந் தேற்றவள்
மழலை மொழியான் மயூரன் தன்னைப்
பீட்ட னெனவே பேணிக் கொண்டவள்
ஞான வைரவர் நற்பணி யெல்லாம்
தான்நா யகன்பின் தானே யேற்று
நானிலம் போற்ற நன்கு நடத்தியும்
மகளுடன் மருகன் மாண்புறு பேரர்
என்றிவர் தம்மொடு ஏதமில் பீட்டனைக்
கட்டித் தழுவிக் காத லோடும்
கொஞ்சிக் குலவிக் கூடி மகிழ்ந்து
சுற்றந் தனது துயரந் துடைத்து
இன்புறப் பேசி இனியன செய்து
காசினி முழுவதுங் கண்டு மகிழ்வுற
எண்பது வயது அண்மிய பருவம்
கண்ணுதற் கடவுளின் கருணையை நினைந்தோ
கணவன் தன்னைக் கனவிற் கண்டோ
காலம் வந்து காலடி பொருந்த
பிங்கள வாண்டு பேசிடும் ஆவணி
ஐந்தாம் திகதி அமைவுறக் கொண்ட
ஞாயிறு என்றே நலின்றிடு வாரம்
பூர்வ பக்கம் பொருந்திடு திதியாம்
சப்தமி யென்னச் சாற்றிடு நாளில்
மகளுடன் மருமகள் மற்றுள சுற்றம்
அருமைப் பேரர் அணைத்திடு பீட்டன்
ஊரா ரயலவர் உற்ற நண்பர்
அருந்துயர்க் கடலுள் ஆழ்ந்து புலம்ப
செஞ்சடை விரித்தோன் திருவடி நீழல்
புகுந்தே யின்பம் பெற்றன ளினிதே.

## மகள் புலம்பல்

### விருத்தம்

அம்மா நான் உனையெண்ணி
அல்லும் பகலும் புலம்புகிறேன்
அம்மா கேட்க விலை யென்றால்
ஆர்தான் எனக்குத் துணையிங்கே?
எம்மா பாதகன் உன்னுயிரை
எடுத்தே சென்று ஒளித்தானோ?
இம்மா துயரந் தீர்த்தருள
இங்கே ஒருகால் வாராயோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரர் புலம்பல்

### விருத்தம்

கண்டதும் கைகள் கூப்பிக்
 கடவுளைத் தொழுது ஏத்திக்
கொண்டாற் பாசத் தாலே
 கட்டியே முத்தந் தந்து
அண்டியே பக்கஞ் சேர்த்து
 அளவிலாப் பொருள்க ளீந்தீர்
விண்தனை விரும்பிச் சென்ற
 வேதனை விளம்ப லாமோ?

## பீட்டன் புலம்பல்

### விருத்தம்

இனியன பொருள்க ளேதும்
 எய்திடின் அவற்றை யெல்லாம்
கனிவுடன் கொணர்ந்து நல்கிக்
 கதைபல கூறி யென்றன்
கனிநிகர் உள்ளம் பூக்கக்
 கருத்துரை பலவுஞ் சொல்வாய்
இனியுனை என்கு காண்பேன்
 என்விதி இதுவோ அம்மா!

## சுற்றம் புலம்பல்

### வெண்பா

வற்றுத சுற்றமெலாம் மாதுயரந் தானடைய
உற்றவிடம் யாதோவெம் உத்தமியே—மற்றுலகில்
சேர்ந்தெம் குறைமுறைகள் செப்பி யுளம்ஆற
யார்தா முளரிங் கினி.

## தேற்றம்

### வெண்பா

மாடுமனை சுற்றம் வளர்செல்வம் வாழ்வெல்லாம்
நீடுபெறு மென்ன நினையாதீர்—பீடுபெறும்
பார்வதிப் பிள்ளையாம் பாங்குடையாள் சென்றடைந்தாள்
பார்வதி பாங்கனையே தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமுறைகள்

## தேவாரம்

இடரினுந் தளரினும் மெனதுறுநோய்
தொடரினு முன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனி லமுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே — சம்பந்தர்

அங்கத்தை மண்ணுக் காக்கி
ஆர்வத்தை உனக்கே தந்து
பங்கத்தைப் போக மாக்கிப்
பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா
சாதல்நாள் நாயேன் உன்னை
எங்குற்ருய் என்ற போதால்
இங்குற்றேன் என்கண் டாயே — அப்பர்

வாழ்வாவது மாயம்மிது மண்ணுவது திண்ணம்
பாழ் போவது பிறவிக் கடல் பசிநோய் செய்தபறிதான்
தாழாதறஞ் செய்மின்றடங் கண்ணுன்மல ரோனும்
கீழ்மேலுற நின்ருன்திருக் கேதார மெனீரே. — சுந்தரர்

## திருவாசகம்

பிணியெலாம் வரினும் அஞ்சேன்
பிறப்பினே டிறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியி னுன்தன்
தொழும்ப ரோடழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்தும் காணுச்
சேவடி பரவி வெண்ணீறு
அணிகிலா தவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக்கூத்தா அம்பொன்செய் அம்பலத் தரசே.
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத் தொண்டனே இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளே
புகுந்து புவனியெலாம் விளங்க
அன்ன நடை மடவாளுமை கோனடி
யோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பரவி யோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்குழல் போற்றி போற்றி

## திருப்புகழ்

புத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவாணி அச்சகம், யாழ்ப்பாணம். 543—77

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org